29. சிலப்பதிகாரத்தில் இசைக்கலையும் இசைக்கருவிகளும்
முனைவர் அ.மகபூபூ..........................................190

30. பக்தி இலக்கியத்தில் சிற்பக்கலைக் கூறுகள்
செக்கை சூரி..................................................198

31. பெரியபுராணத்தில் வானியற்கலை
ச.தென்பாண்டி..................................................203

32. சைவ சமயத்தின் உயிர்க் கொள்கைகள்
முனைவர் தீ.கீதாமகேஸ்வரி..................................211

33. கருவூர்த்தேவரின் திருவிசைப்பா காட்டும் தமிழர் இசைக்கருவிகள்
தனுஷா நீலமோகன்..........................................216

34. பெரியபுராணத்தில் இசைக்கருவிகள்
முனைவர் ரெ.பரமேஷ்........................................223

35. காரைக்காலம்மையாரின் இசைத்தமிழ்த் திறம் : பெரியபுராணத்தை முன்வைத்து
ச.வாசுதேவன்..................................................228

36. திருஞானசம்பந்தர் தேவாரப் பாடல்களில் இசைக்கருவிகள்
விதுர்சிகா தயாபரன்..........................................234

37. விவிலியத்தில் இசைக்கலை
முனைவர் ச.சு.அருள்பிரகாஷ்..............................239

38. திருவாதவூரகள் புராணம் புலப்படுத்தும் சமய வாழ்வியற் பண்பாடுகள்
செல்வி. மயூரதி குகனேஸ்வரன்............................245

39. மாணிக்கவாசகர் படைப்புகளில் சிற்பக்கூறுகள் மற்றும் குறியீட்டுத்தன்மை
நிவேதா மகேஸ்வரன்..........................................252

40. சமயச் சான்றோர் - ஸ்ரீ வேதாந்த தேசிகர்
வ. லட்சுமி நாராயணன்......................................258

# சிலப்பதிகாரத்தில் இசைக்கலையும் இசைக்கருவிகளும்

முனைவர் அ.மகபுபூ
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துற
என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி - 642001
Mahabobu1985@gmail.com
9846506305

**ஆய்வுச்சுருக்கம்**

இசைக்கருவிகளைப் பண்ணிசைக்கருவிகள், தாளக் கருவிகள் என்று இருபெரும் பிரிவுகளாக அறிஞர்கள் பிரிக்கின்றனர். பண்களை இசைக்கத் தகுந்தவற்றைப் பண்ணிசைக் கருவிகள் என்றும் தாளத்தைப் பொருத்தமாகக் குறித்துச் சுவையுடன் ஒலிக்கும் கருவிகளைத் தாளக் கருவிகள் என்றும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் இசை எழுப்பும் வாயில்களைக் கொண்டும் இசைக்கருவிகளை நான்கு பிரிவாகப் பிரித்துள்ளனர். அந்த நான்கு வகைகளைப் பற்றி வெ. நீலகண்டன், ''தமிழர் இசைக்கருவிகளை அவற்றின் தயாரிப்பு மற்றும் இசைக்கும் விதத்தின் அடிப்படையில் தோல்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என நான்கு விதமாக வகைப்படுத்துகிறார்கள். விலங்குகளின் தோலைக்கொண்டு தயாரிக்கப்படுபவை தோற்கருவிகள். காற்றை வாங்கி நாதம் எழுப்புவன துளைக்கருவிகள். சுருதிக்கு அடிப்படையாக விளங்குபவை நரம்புக்கருவிகள். உலோகங்களால் வார்க்கப்படுபவை கஞ்சக்கருவிகள்'' என்று இசைக்கருவிகள் பற்றி விளக்கம் தருவதை அறியமுடிகிறது. இவ்விசையையும் இவ்விசைக்கருவிகளைப் பற்றியும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**முன்னுரை**

சிலப்பதிகாரத்தில் இசைக்கருவிகளில் தோல்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என்ற நான்கு வகைப்படும். அவற்றில் விலங்குகளின் தோலைக்கொண்டு தயாரிக்கப்படும் தோற்கருவிகள், காற்றை வாங்கி நாதம் எழுப்புவன துளைக்கருவிகள் என இருவகைப்படுத்தலாம். துளைக்கருவிகளும், நரம்புக்கருவிகளும் பண்ணிசைக் கருவிகளில் அடங்கும். தோற்கருவி, கஞ்சக்கருவி

போன்றவை பெரும்பாலும் தாளக் கருவிகளில் அடங்கும். தற்காலத்தில் துளைக்கருவிகளும் உலோகத்தில் செய்யப்படுவதைக் காணமுடிகிறது.

**சங்ககால இசைக்கருவிகள்**

பண்டைய காலத்தில் பலவகையான இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டதை சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகளை பட்டியலிடுவது போல் மலைபடுகடாம் கூத்தர் பையிலிட்டு எடுத்துச் சென்ற இசைக்கருவிகளைக் கூறியே அந்நூல் தொடங்குகின்றது.

**"திண் வார் விசித்த முழவொடு, ஆகுளி,**
**நுண் உருக்கு உற்ற விளங்கு அடர்ப் பாண்டில்,**
**மின் இரும் பீலி அணித்தழைக் கோட்டொடு,**
**கண் இடை விடுத்த களிற்று உயிர்த் தூம்பின்,**
**இளிப் பயிர் இமிரும் குறும் பரம் தூம்பொடு,;**
**விளிப்பது கவரும் தீம் குழல் துதைஇ,**
**நடுவு நின்று இசைக்கும் அரிக்குரல் தட்டை**
**கடி கவர்பு ஒலிக்கும் வல்வாய் எல்லரி**
**நொடிதரு பாணிய பதலையும் பிறவும்** (மலை. 3 - 11)

இவையேயன்றி இன்னும் பல இசைக்கருவிகளும் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதைக் குறிக்கும் வகையிலேயே பிறவும் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. சங்க காலத்திற்கு அடுத்ததாக அமைந்த சிலப்பதிகாரத்தில் எல்லாக் கருவிகளும் இசைக்கப்படுவதை அரங்கேற்காதையில் மாதவி ஆடியதாக இளங்கோவடிகள் கூறியுள்ளார். மேலும்,

**"யாழும் குழலும் சீரும் மிடறும்**
**தாழ்குரல் தண்ணுமை ஆடலொ டிவற்றின்**
**இசைந்த பாடல் இசையுடன் படுத்து,**
**வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கித்**
**தேசிகத் திருவின் ஓசை கடைப்பிடித்துத்**
**தேசிகத் திருவின் ஓசை யெல்லாம்**
**ஆசின் றுணர்ந்த அறிவின னாகிக்**
**கவியது குறிப்பும் ஆடல் தொகுதியும்**
**பகுதிப் பாடலுங் கொளுத்துங் காலை**
**வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்**

அசையா மரபின் இசையோன் றானும் (சிலம்பு-அரங்:26-36)

என்ற வரிகளில் யாழ் இசையும், குழல் இசையும் தாளக்கூறுபாடுகளும், சாரீரமும் தாழ்ந்த குரல் எழுப்பும் தண்ணுமையும் ஆகிய இவற்றால் இசைந்த இசையைக் கூத்திற்குப் பொருந்துமாறு இசையுடன் இசைக்க வல்லவன். வரிக்கும் ஆடலுக்கும் உரிய பொருள்களான நான்கு இயக்கங்களையும் இயக்கி, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய தேசிகச் சொற்களின் ஓசையைச் சுத்தமாகக் கடைப்பிடிப்பவன். அந்தச் சொற்களின் ஓசை குறிக்கும் பொருள்களெல்லாம் குற்றமறத் தெரிந்த அறிஞன். மேலும், கவியினை இயற்றியவனுடைய மனக்குறிப்பும், ஆடலின் தொகுதிகளும் இன்ன பகுதிக்குப் பாடலுள் இது பொருத்தமாகச் சேரும் என்ற பொருந்து நிலையும், அவன் அறிந்தவன், குற்றம் தீர்ந்த நூல் வழக்கினைக் கொண்டு அவற்றை வகுக்கவும், விரிக்கவும் வல்லவன். மேலும் தான் அவ்வாறு கொண்ட உறுதியினின்றும் அசையாத இயல்பினை உடையவனாகவும் இசைப்புலவன் இருக்க வேண்டும். அத்தகைய ஆசிரியன் மாதவிக்கு இசை ஆசிரியனாக அமைந்திருந்தனன் என்பதின் மூலம் இசையைப்பற்றியும் இசைகருவிகளைப்பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது.

**தோல்கருவிகள்**

தோலால் போர்த்தப்பட்ட கருவிகள் தோற்கருவிகள் எனப்பட்டன. பண்டைய மக்களால் பயன்படுத்தப்பட்ட தோல்கருவிகளில் கையால் முழக்கப்படுபவை ஒரு வகை, குச்சிகள் கொண்டு தாக்கி முழக்கப்படுபவை மற்றொருவகை. தாமே முழங்குவன ஒருவகை. ஒரு பக்கம் அடித்துத் தாக்குவதாலும் மறுபக்கம் தடவி வருடி உராய்வதாலும் முழங்குவன ஒருவகை, நூல்களிலும், நாட்டார் வழக்காற்றிலுமாக நமக்குக்கிடைத்த தோற்கருவிகள் பல அவை,

1. அடக்கம், 2. அந்தரி, 3. அமுதகுண்டலி, 4. அரிப்பறை, 5. ஆகுளி, 6. ஆமந்திரிகை, 7. ஆவஞ்சி, 8. உடல், 9. உடுக்கை, 10. உறுமி, 11. எல்லரி, 12. ஏறங்கோள், 13. ஒருவாய்க்கோதை, 14. கஞ்சிரா, 15. கண்விடு தாம்பு, 16. கணப்பறை, 17. கண்டிகை, 18. கரடிகை, 19. கல்லலை, 10. கல்லலகு, 21. கல்லவடத்திரள், 22. கிணை, 23. கிரிக்கட்டி, 24. குடமுழா, 25. குண்டலம், 26. கும்மடி, 27. கைத்தரி, 28. கொட்டு, 29. கோட்பறை, 30. சகடை 31. சந்திரபிறை, சூரியபிறை, 32. சந்திரவளையம், 33. சல்லரி, 34. சல்லிகை, 35.

சிறுபறை, 36. சுத்தமத்தளம், 37. செண்டா, 38. டமாரம், 39. தக்கை, 40. தகுணித்தல், 41. தட்டை, 42. தடாரி, 43. தண்டோய், 44. தண்ணுமை, 45. தபலா,46. தமருகம், 47. தமுக்கு, 48. தவண்டை, 49………… 50. தவில்,51. தாசரிதட்டை, 52. திமிலா, 53. துடி 54. துருமை, 55. துத்திரி, 56. துந்துபி, 57. தூரியம், 58. தொண்டகச் சிறுபறை, 59. தோலக், 60. நகரி, 61. படவம், 62. படலிகை, 63. பம்பை, 64. பதலை, 65. பறை, 66. பாகம், 67. பூமாடுவாத்தியம், 68. பெரும்பறை, 69. பெல்ஜியக்கண்ணாடி மத்தளம், 70. முரசு, 71. பேரி, 72. மகுளி, 73. மத்தளம், 74. மிருதங்கம், 75. முருடு, 76. முழவு, 77. மேளம், 78. மொந்தை, 79. விரவேறு, 80. ஜமலிகா என்பனவாகும்.

**தண்ணுமை**

தண்ணுமை என்னும் தோற்கருவி ஒரு தாளக் கருவியாகும். இன்றைய மிருதங்கம்போல அக்காலத்தில் இசைக்கப்பட்ட கருவியாகும். தண்ணுமை என்னும் இசைக்கருவி எழுச்சிமிக்க கருவியாகப் பேசப்படுகின்றது. காட்டு அரண்களில் கட்டப்பட்டுள்ள தண்ணுமைப்பறையின் ஒலி அவ்வழி நடந்து செல்வோர்க்கு அச்சத்தை ஏற்படுத்தியது என்பதை,

> **“கருங்கண் மறவர் கல்கெழு குறும்பின்**
> **எழுந்த தண்ணுமை இடங்கட் பாணி**
> **……. ……. …….**
> **அருஞ்சுரஞ் செல்வோர்நெஞ்சம் துண்ணென”**
>
> (அகம். 87. 7 - 9)

என்ற பாடல் வரிகள்மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**தடாரி**

தடாரி என்றால் உடுக்கை என்றும், கிணைப்பறை என்றும் கூறுவர். தடாரிபறையானது படம்விரித்த பாம்பினது பொறியை ஒத்திருந்தது. அந்தத் தடாரியின்கண் அடிக்கும் இடம் அகன்றது. இது இரட்டைத் தாளத்தைத் தோற்றுவிக்கும் ஓர் இசைக்கருவியாகும். விடிகின்ற கிரணங்களையுடைய வெள்ளியெழுந்த செறிந்த இருளையுடைய விடியற்காலத்தில் இக்கருவி இசைக்கப்படும் போர்க்களத்தில் தடாரி ஒலிக்கப்படும் போர் வெற்றிபெற தடாரி தட்டி வாழ்த்துவதும் உண்டு. இதனை,

**"சிதா அர் வள்விற் தெண்கண் ஒற்றி**
**விரல்விசை தவிர்க்கும் மாலையில் பாணி**

(புறம். 381; 12 - 14)

என்ற பாடல் வரி உணர்த்துகிறது,

**துடி**

துடி என்னும் தோற்கருவியானது நம் இலக்கிய இலக்கண நூல்களில் பயின்று வரும் ஒரு கருவியாகும். துடி இடிபோன்று ஒலிக்கும் துடியின் தாளம் மிக்க ஒலியையுடையது. அவ்வொலி விசைந்த நடையையுடையது. வெள்ளம் வரும் செய்தியை அறிவித்து காவல்காக்கும் பணியில் துடிமுழக்கம் அரிய பணியைச் செய்து வந்துள்ளது. துடி என்பது உடுக்கை என்னும் பறை வகையைச் சேர்ந்தது. இதனை,

**"துடியடியன்ன தூங்கு நடைக் குழவி"**

(பொரு. 125)

என்ற பாடல்வரிமூலம் அறியமுடிகிறது.

**முழவு**

முரசு என்ற தோற்கருவியைப் போலவே முழவு என்ற தோற்கருவியும் நம் பண்டைய இலக்கியங்களில் வரும் ஒரு கருவியாகும். இதனை குறுந்தடியால் அடித்து ஒலி எழுப்புவர். முழவானது தாளக்கருவியைத் தழுவி ஒலிக்கும் இயல்பினையுடையது. இதன் ஒலி கேட்போர் மகிழும் தன்மையுடையது. பண்டைத்தமிழர் மணவிழாவில் பல இசைக்கருவிகளை முழங்கினர். அவற்றுள் முழவும் ஒன்று. முழ என்ற சொல்லுக்கு முரசு என்றும் பொருள் கூறுவர் இதனை,

**"உழவர்களி தூங்க முழவு பணை முரசு** (பரி. 7 - 16)

என்ற வரிகளால் அறியமுடிகிறது. சிலம்பின் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் இம்முழவைப்பற்றிக் கூறுகையில் முழவு என்னும் சொல் வழங்கப்பட்டது என்று குறிப்பிடுகிறார். முழவு ஏழு வகைப்படும். அவையாவன, 1. அகமுழவு, 2. அகப்புற முழவு, 3.புற முழவு, 4. புறப்புற முழவு, 5.பண்ணமை முழவு, 6.நாண் முழவு, 7.காலை முழவு என்பனவாகும்.

**நரம்புக்கருவிகள்**

பண்டைகாலத்தில் பயன்படுத்தப்பட்ட நரம்புக்கருவிகளுள் குறிப்பிடத்தக்கது யாழ். இறைவனைத் துதித்துப்பாடும் போது பக்க

இசைக்கருவியாக யாழைப் பயன்படுத்தி உள்ளனர். இதனைப் பின்வரும் அகநானூறு பாடல்வரிகளால் அறியலாம்

**“செவ்வழி நல் யாழ் இசையினென், பையென,**
**கடவுள் வாழ்த்தி, பையுள் மெய்ந் நிறுத்து (அகம்-14:15-16)**

என்ற பாடல்வரிகளின்வழி உணரலாம். சங்ககால நூல்களில் யாழ் உறுப்புகள் குறித்தச் செய்திகள் காணக்கிடக்கின்றன. பண்டைய கால மக்கள் வில்யாழ், பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் எனப் பலவகை யாழ்களைப் பயன்படுத்தியுள்ளனர். என்பது நூல்கள் வழி அறியக்கூடிய செய்தியாகும். கல்லாடர் தமது நூலில் நாரதயாழ், கீசகயாழ், தும்புருயாழ், மருத்துவயாழ் என நான்கு வகை யாழ்களைக் குறிப்பிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**வில்யாழ்**

யாழ் வகைகளுள் முதன்மையாகத் தோன்றியதாகக் கருதப்படுவது வில்யாழ், சங்க கால நூல்களுள் ஒன்றான பெரும் பாணாற்றுப்படையில் வில்யாழ் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. குமிழங் கொம்பை வில் போன்று வளைத்து மரல்நாரினைத்திரித்து நரம்பாகக் கட்டி இசைக்கப்பட்டது வில்யாழ் ஆகும். இதிலிருந்து எழும் நாதம் அருகில் உள்ளோர் மட்டுமே கேட்கும் வகையில் மென்மையானது.

**பேரியாழ்**

பேரியாழின் உறுப்புகள் குறித்து மலைப்படுகடாம் எனும் நூலின் உள்ள செய்யுள் வாயிலாக அறியமுடிகின்றது. இருபத்தொன்று நரம்புகள் கொண்ட பேரியாழ் ஆனது வறுவாய் இடை, கடை, திவவி, தண்டு (கோடு), நரம்பு, தோல், போர்வை, ஆணி, பத்தல், உந்தி, வெண்கை யாப்பு முதலிய உறுப்புகளைக் கொண்டிருந்தன என்பதை,

**“தொடித் திரிவு அன்ன தொண்டுபடு திவவின்,**
**குடிப்பகை அனைத்தும் கேள்வி போகாக்,**
**குரல் ஓர்த்துத் தொடுத்த சுகிர் புரி நரம்பின்,**
**………………………………………………**
**வணர்ந்து ஏந்து மருப்பின் வள் உயிர்ப் பேரியாழ். (மலை:21-37)**

என்ற வரிகளால் அறியமுடிகிறது.

**மகர யாழ்**

மகர மீனின் வடிவை ஒத்தது எனவும், முதலைத்தலை, நாயின் உடல் ஆகியவற்றைக் கொண்ட ‘மகர மச்சம்’ எனும் பெயர் கொண்ட

விலங்கின் அமைப்பைக் கொண்டது எனவும் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. யவனர்களால் தமிழகத்திற்கு கொணரப்பட்டது. மகரயாழ் என்பது சரித்திரக் குறிப்பு. மணிமேகலை எனும் நூலில் மகரயாழ் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. மகரயாழ் பத்தொன்பது நரம்புகளைக் கொண்டது.

**சகோடயாழ்**

பதினான்கு நரம்புகளைக் கொண்டது சகோடயாழ். இதனை சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் வேனிற்காதைக்கான உரையுள் சகோடயாழ் பற்றிய குறிப்பிடுகிறார். இதனை,

**“பிழையா மரபின் ஈரேழ் கோவையை**

**உழைமுதற் கைக்கிளை இறுவாய் கட்டி” (சிலம்பு-வேனி:31-32)**

என்ற வரிகளில் மயங்கா மரபினை உடைய, இப்பதினாற் கோவையாகிய சகோடயாழை என்று பொருள் கூறுவதை அறியமுடிகிறது.

**செங்கோட்டி யாழ்**

கோடு என்பது யாழின் உறுப்புகளுள் ஒன்று செம்மையாக கோட்டினை உடையது செங்கோட்டியாழ் எனப்பட்டது. இது ஏழு நரம்புகளைக் கொண்டிருந்தது. ஆறு உறுப்புகளைக் கொண்டது.

**சீறியாழ்**

பத்தர், திவவு, கோடு, போர்வை, நரம்பு ஆகிய ஐந்து உறுப்புகளைக் கொண்டது. இதுவும் ஏழு நரம்புகளைக் கொண்டது. பழந்தமிழ் நூல்களில் சீறியாழ் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ‘‘இன்குரற் சீறியாழ் எனும் நற்றிணை வரிகளால் இக்கருவி இனிய ஒலிமைத் தந்தது என்பதை அறிய முடிகிறது.

**ஏழிசை பட்டியலிட்டு**

சிலப்பதிகார இசைக்கலையைப்பற்றி யோகி சுத்தானந்த பாரதியார் ஏழிசையைப் பற்றி பட்டியலிட்டு விளக்குகிறார். இந்த ஏழிசைகட்கும் தமிழிலும் வடமொழியிலும் 22 சுருதிகள் அல்லது அலகுகளாம், அலகு என்பது மாத்திரையாகும். இந்த இசைக்கோவை ஆயம், சதுரம், வட்டம், திரிகோணம் என நான்கு பாலைகளாக வழங்கும் ஸ்வரம் இராகம் என்பதே தமிழில் இசை, பண் என வழங்கும் என்பதையும் சுருதி என்பதே அலகு அல்லது மாத்திரை எனப்பதையும், ஏழிசையின் விளக்கமாக சுரம், எழுத்து, தமிழ்ப்பெயர், ஆரியப்பெயர், இடம், மாத்திரை, மணம், சுவை, ஓசை போன்றவற்றை விளக்கியுள்ளதை தெறிந்து கொள்ள முடிகிறது.

**முடிவுரை**

இவ்வாறாக பண்டைய காலம் முதல் சிலம்பு காலம் வரை இசையும் இசைக் கருவிகளான தோல்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என்ற கருவிகள் பற்றியும் அவற்றின் பயன்பாட்டினைப்பற்றியும் அறிந்து கொள்ள முடிகிறது. தமிழர் பல கலைகளிலும் சிறந்து விளங்கினர். ஆவை நுண்கலை கவின்கலை என்பர். சிலப்பதிகாரம் முத்தமிழ் காப்பியம் இயல், இசை, நாடகம் என முத்தமிழிலும் சிறப்புபெற்ற காப்பியம் அவற்றில் இசைக்கலையில் சிறுபகுதி மட்டும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

**துணைநூல் பட்டியல்**


1. அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரம், கேசவர் அச்சுக்கூடம், சென்னை, 1927.
2. புலியூர்கேசிகன், சிலப்பதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை - 6000014, முதல்பதிப்பு- 2011.
3. பட்டினப்பாலை, முனைவர் தமிழண்ணல், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, மு.ப. 2022.
4. பரிபாடல், முனைவர் தமிழண்ணல், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, மு.ப. 2022.
5. நற்றிணை, முனைவர் தமிழண்ணல், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, மு.ப. 2022.
6. முல்லைப்பாட்டு, முனைவர் தமிழண்ணல், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை. மு.ப. 2022.
7. புறநானூறு, முனைவர் தமிழண்ணல், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை மு.ப. 2022.